22712

OL/2017/22-T-I,II(OLD)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

22 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය I, II
தமிழ் மொழியும் இலக்கியமும் I, II
Tamil Language and Literature I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

**கவனிக்க :**
(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் **I** இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

● தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**1.** 'ஒன்றுங் கொடாதானைக் கோ வென்றும் **கா** வென்றும் கூறி...' - இங்கு கா என்பதன் பொருள்
(1) காடு (2) கான் (3) சோலை (4) சாலை

**2.** 'குற்றம் கடிதல் **வடு** அன்று; வேந்தன் தொழில்' - இங்கு வடு என்பது
(1) பிஞ்சு (2) காயம் (3) சினம் (4) பழி

**3.** 'உற்றுழித் தீர்வார் **உறவு** அல்லார்' - உறவு என்பதன் எதிர்ச்சொல்
(1) நட்பு (2) தோழமை (3) தீமை (4) பகை

**4.** '**மாரவேள்** சிலை குனிக்க மயில் குனிக்கும் காலம்' - இங்கு மாரவேள் எனக் குறிப்பிடப்படுவது
(1) முருகன் (2) தலைவன் (3) மன்மதன் (4) மயன்

**5.** **பாணன்** யாழில் பண்ணமைத்துப் பாடினான் - பாணன் என்பதன் எதிர்ப்பாற் சொல்
(1) பாடினி (2) பாணினி (3) பரத்தை (4) பண்ணத்தி

● பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**6.** பனையின் இளையது வடலி; நெல்லின் இளையது
(1) கன்று (2) நாற்று (3) குட்டி (4) பிள்ளை

**7.** மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன
(1) ஐம்பொறிகளாகும். (2) ஐந்திணையாகும்.
(3) பஞ்சபூதங்களாகும். (4) ஐம்புலன்களாகும்.

**8.** கலைப்படைப்பொன்றின் குறைநிறைகளை ஆராய்தல்
(1) கண்டனம் எனப்படும். (2) நயத்தல் எனப்படும்.
(3) திறனாய்தல் எனப்படும். (4) பரிசீலித்தல் எனப்படும்.

**9.** ஐம்பது வருட நிறைவில் கொண்டாடப்படும் விழா
(1) பொன்விழா (2) வைரவிழா (3) வெள்ளிவிழா (4) வசந்தவிழா

**10.** அரண்மனையில் அரச குலப்பெண்கள் வசிப்பதற்கான தனிப்பகுதி
(1) சாளரம் (2) கன்னிமாடம் (3) அந்தப்புரம் (4) ஓலக்கம்

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

11. 'கலம்' என்னும் சொல் குறிக்கும் பொருள்கள் அடங்கிய தொகுதி
(1) காப்பு, பாத்திரம், சண்டை (2) பாத்திரம், ஆபரணம், கப்பல்
(3) ஆபரணம், சங்கு, வீடு (4) வீடு, வாசல், தோட்டம்

12. 'வழிமேல் விழி வைத்து' என்ற அருஞ்சொற்றொடர் உணர்த்தும் பொருள்
(1) ஆவலுடன் காத்திருத்தல் (2) பார்வை இல்லாதிருத்தல்
(3) அழகை இரசித்தல் (4) வழியை அவதானித்தல்

13. தங்கம்மா அலுவலகமொன்றில் 'கிளார்க்' (clerk) ஆக வேண்டுமெனக் கனவு கண்டாள். 'கிளார்க்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராகத் தமிழில் வழங்கும் சொல்
(1) பணிப்பாளர் (2) எழுத்தாளர் (3) தொழிலாளி (4) எழுதுவினைஞர்

14. நிறுத்தக் குறிகளில் முக்காற்புள்ளி எனப்படுவது
(1) , (2) ; (3) : (4) !

15. 'கண்ணை இமை காப்பது போல' என்பது
(1) இணைமொழித்தொடர் (2) உவமைத்தொடர்
(3) மரபுத்தொடர் (4) தொகைநிலைத்தொடர்

16. ஒருவருக்குக் கிடைக்கும் வருவாய் முதலியவற்றை இல்லாது செய்தலைக் குறிக்கும் மரபுத்தொடர்
(1) வயிறுகடித்தல் (2) வயிறு எரிதல் (3) வயிறு கழுவுதல் (4) வயிற்றிலடித்தல்

17. நாக்கு நீட்டுதல் என்னும் மரபுத்தொடர் குறிக்கும் பொருள்
(1) ஏளனம் செய்தல் (2) இரந்து கேட்டல்
(3) எதிர்த்துப் பேசுதல் (4) இசைவாகப் பேசுதல்

18. பொருளால் **வேறுபட்ட** தொடர்
(1) கிட்டத்தட்ட (2) திட்டவட்டமாக
(3) ஏறக்குறைய (4) அண்ணளவாக

19. எந்தப் பெரியவரும் தவறுவிட நேரிடும் என்பதனை உணர்த்தும் பழமொழி
(1) ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்.
(2) ஆனை படுத்தாலும் குதிரை மட்டம்.
(3) எறும்பூரக் கற்குழியும்.
(4) ஆனைக்கும் அடி சறுக்கும்.

20. மிக அரிதாக நடைபெறும் செயலைக் குறிக்கும் உவமைத்தொடர்
(1) அத்தி பூத்தாற் போல
(2) தாரகை நடுவே தண்மதி போல
(3) சூரியனைக் கண்ட தாமரை போல
(4) கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல

21. புளியம்பழம் என்ற பகுபதத்தைப் பிரித்தால் வரும் 'அம்' என்பது
(1) இடைநிலை (2) சந்தி
(3) சாரியை (4) விகாரம்

22. பின்வருவனவற்றுள் தொழிற்பெயர்
(1) ஓடம் (2) மாடம் (3) வாடும் (4) ஓட்டம்

23. தொழிலாளர்களது போராட்டம் வெற்றி கண்டது. 'தொழிலாளர்களது போராட்டம்' என்பது
(1) கொடை வேற்றுமை (2) உடைமை வேற்றுமை
(3) இட வேற்றுமை (4) எழுவாய் வேற்றுமை

24. 'வாழ்வாங்கு வாழ்க' - இங்கு வாழ்க என்பது
(1) தன்மை வினைமுற்று (2) வியங்கோள் வினைமுற்று
(3) முன்னிலை வினைமுற்று (4) படர்க்கை வினைமுற்று

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

25. பசுக்கன்று என்பதில் இடம்பெற்றது
(1) இயல்பு புணர்ச்சி (2) திரிதல் விகாரம்
(3) கெடுதல் விகாரம் (4) தோன்றல் விகாரம்

26. 'கம்பனும் பாடாக் கவிதை' - இங்கு 'உம்' இடைச்சொல் உணர்த்தும் பொருள்
(1) உயர்வு சிறப்பு (2) ஐயம் (3) இழிவு சிறப்பு (4) எதிர்மறை

27. 'வேகமாக ஓடினான்' - இங்கு வேகமாக என்பது
(1) வினையெச்சம் (2) பெயரெச்சம் (3) வினையடை (4) வினையாலணையும் பெயர்

28. சுட்டெழுத்து **அல்லாதது**
(1) அ (2) இ (3) உ (4) எ

29. இறந்தார் என்பதனை இறைவனடி எய்தினார் என்று கூறும் வழக்கு
(1) குழூஉக்குறி (2) இடக்கரடக்கல்
(3) மங்கலம் (4) மரூஉ

30. கவிதை பாடியவனைப் பாராட்டினார். இங்கு பாடியவனை என்பது
(1) தொழிற்பெயர் (2) வினையாலணையும் பெயர்
(3) வினையடை (4) காரணப்பெயர்

● பின்வரும் பந்திகளின் பிரதான கருத்தைத் தெரிவுசெய்க.

31. இராமாயணம் மிகவும் பழைமையானது. கிறிஸ்துவுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இராமாயணக் காவியம் வடமொழியில் எழுதப்பட்டுவிட்டது. தமிழில் சங்க இலக்கியங்களிலும் இராமாயணச் செய்திகள் வருகின்றன. இராமாயணத்தின் தொன்மைக்கு இவற்றைவிட வேறு சான்றுகள் தேவையில்லை.
(1) இராமாயணம் முதலில் வடமொழியிலேயே எழுதப்பட்டது.
(2) தமிழிலும் இராமாயணக் கதை உள்ளது.
(3) இராமாயணம் மிகவும் பழைமை வாய்ந்ததாகும்.
(4) வடமொழியும் தமிழ்மொழியும் தொன்மை வாய்ந்தவை.

32. தமிழில் பலவகையான இலக்கியங்கள் உள்ளன. பண்டைய இலக்கியங்கள் செய்யுள் வடிவில் அமைந்தன. பிற்காலத்தில் வசனத்திலும் இலக்கியங்கள் எழுதப்பட்டன. அவை யாவும் பல்வேறு வடிவங்களில் அமைந்து விளங்குகின்றன.
(1) தமிழ் பல இலக்கியங்களைக் கொண்டதொரு மொழியாகும்.
(2) தமிழில் செய்யுளிலும் உரைநடையிலும் அமைந்த பல்வகை இலக்கியங்கள் உள்ளன.
(3) செய்யுள் இலக்கியங்கள் பழைமை வாய்ந்தவை.
(4) வசன இலக்கியங்கள் பிற்பட்ட காலத்தவை.

● வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.

33. பாலாவும் பாத்திமாவும் நானும் பாடசாலைக்கு ஒழுங்காக
(1) போனார்கள். (2) போவார்கள்.
(3) போவோம். (4) போய்வருகிறார்கள்.

34. நடந்த இரயில் விபத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்தது மாத்திரமன்றி ஏழு பேர்
(1) உயிரிழக்கவும் நேர்ந்தது. (2) உயிரிழந்தார்கள்.
(3) உயிரிழக்க நேர்ந்தது. (4) உயிரிழப்புக்குள்ளாயினர்.

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

● சரியான விடையைத் தெரிவுசெய்க.

**35.** மாணவர்கள், ஆசிரியர்கள் கொண்ட குழுக்கள் சிரமதானப் பணியில்

(1) ஈடுபட்டது. (2) ஈடுபட்டனர்.
(3) ஈடுப்பட்டன. (4) ஈடுபட்டார்கள்.

**36.** எழுத்துப் **பிழையற்ற** சொற்கூட்டம்

(1) குறிக்கோள், மேற்க்கோள், வேண்டுகோள், கருதுகோள்
(2) திணைக்களம், களஞ்சியம், கொந்தளிப்பு, ஊழியம்
(3) வளர்ச்சி, உயர்ச்சி, தொடற்சி, தளர்ச்சி
(4) சம்பளம், கம்பழி, உளவியல், நாளங்காடி

**37.** முனிவர்கள் வனத்தில் ....................... அமைத்து வதிந்தனர்.

(1) வீடு (2) ஆசிரமம்
(3) பாசறை (4) வாடிவீடு

**38.** நீதிமன்றத்தில் சாட்சிகள் ....................... அளித்தனர்.

(1) பிரசாரம் (2) எதிர்வாதம்
(3) வாதம் (4) வாக்குமூலம்

**39.** அரசாங்கம் அமெரிக்காவோடு புதிய ....................... ஒன்றைச் செய்துகொண்டது.

(1) ஒத்துழைப்பு (2) ஆவணம்
(3) உடன்படிக்கை (4) முன்மொழிவு

● கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

**40.** அ - ஏனைய விடயங்களைப் பாடும் செய்யுள்கள் புறத்திணை இலக்கியங்கள் எனப்படும்.
ஆ - தமிழ், உலகில் இன்றும் வழங்கிவரும் தொன்மையான மொழிகளுள் ஒன்று.
இ - அவற்றுள் காதல் தொடர்பான செய்யுள்கள் அகத்திணை இலக்கியங்கள் எனப்படும்.
ஈ - சங்கச் செய்யுள்கள் அதன் தொன்மைக்கான பிரதான சான்றாக அமைகின்றன.
உ - அவை காதல், வீரம், கொடை முதலான விடயங்களைப் பாடுபொருளாகக் கொண்டுள்ளன.

(1) ஆ, ஈ, உ, இ, அ (2) ஈ, ஆ, உ, அ, இ
(3) இ, உ, ஆ, ஈ, அ (4) உ, ஈ, அ, ஆ, இ

* *

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

22 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය I, II
தமிழ் மொழியும் இலக்கியமும் I, II
Tamil Language and Literature I, II

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
※ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
'காப்படங்கென் றன்னை'

(ii) "வளர்த்த நாய் முகத்தைப் பார்ப்பது போல பார்வதியைப் பார்த்தபடி நின்றார்." - இதில் இடம்பெற்றுள்ள அணியை விளக்குக.

(iii) "ஓடக்கரை மண்ணெடுத்து
ஒன் உருவம் செஞ்சு வைச்சேன்"
(அ) ஓடக்கரை என்பதன் பொருள் யாது ?
(ஆ) 'ஒன்' என்ற முன்னிலை ஒருமையின் திருத்திய வடிவம் யாது ?

(iv) "இராஜராஜசோழனால் தஞ்சைப் பெருங்கோயில் நிர்மாணிக்கப்பட்டது." - இந்தச் செயப்பாட்டுவினை வாக்கியத்தை செய்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

(v) "குறத்தியரும் அரம்பையரும் கரும்பாம் பாட்டினர்." - இதில் இடம்பெற்ற சிலேடையணியை விளக்குக.

(vi) வில்லுப்பாட்டு ஒன்று நிகழ்த்த வேண்டிய ஒழுங்கினை நிரற்படுத்துக.
சபை வணக்கம், கதை ஆரம்பம், கடவுள் வாழ்த்து, கதை வளர்ச்சி, மங்களம், கதை முடிவு

(vii) "பொன் மாலை பெற்ற தோளோடும் புறப்பட்டான் நன்மாலை வேலான் நளன்." - இதில் இடம்பெற்றுள்ள எழுவாய், பயனிலையைத் தருக.

(viii) "ஒருவேளை, அக்கா, நோன்பிற்காக நீ இங்கே இருந்துவிட்டதுதான் அத்திம்பேருக்குக் கோபமோ ?"
(அ) 'நோன்பு' என்பதற்கு நிகராகத் தமிழில் வழங்கும் வேறு சொல் ஒன்று தருக.
(ஆ) இங்கு இடம்பெற்றுள்ள உறவுப் பெயர்கள் எவை ?

(ix) "தூபங்கமழத் துயிலணைமேல் கண்வளரும் மாமன் மகளே." - இங்கு இடம்பெற்றுள்ள நித்திரையைக் குறிக்கும் **இரண்டு** சொற்களையும் தருக.

(x) மாண்புமிகு, வணக்கத்துக்குரிய, அதிமேதகு, அன்புக்குரிய - இவற்றுள் மதகுருமாரை விளிப்பதற்குப் பயன்படுத்தப்படும் தொடர் யாது ?

(20 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**2.** பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(i) இன்று நமது நாட்டில் குப்பைகளை அகற்றுதல் பாரியதொரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. நமது நாட்டில் அவற்றை அகற்றுவதற்கான வழிமுறைகளைச் சரியான வகையில் நடைமுறைப்படுத்தாத காரணத்தால் நாம் பாரிய அனர்த்தங்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. ஆகவே அவற்றைச் சரியான விதத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தொடர்பான ஒரு **விளக்கக் கட்டுரை.**

(ii) 'ஆசிரியத்தொழில்' புனிதமானது. நமது அறிவுக்கண்களைத் திறப்பவர்களாகவும் நமது வளர்ச்சிக்கு ஏணிப்படிகளாகவும் ஆசிரியர்கள் விளங்குகின்றார்கள். ஆசிரியர்கள் தெய்வத்துக்குச் சமமானவர்கள். அவர்களை நாம் மதிக்க வேண்டும். அவர்களது சேவைகளைப் பாராட்ட வேண்டும் என்ற பொருள்பட ஆசிரியர் தின விழாவில் நிகழ்த்தப்படும் ஒரு **மேடைப்பேச்சு.**

(iii) உல்லாசப் பயணிகளின் வருகையால் நாட்டின் வருமானம் அதிகரித்து நாடு முன்னேற்றமடையும் எனக் கருதும் ஒருவருக்கும், நாட்டின் பண்பாடு சீரழிவதுடன் போதைப்பொருள் பாவனை, நோய்த் தொற்றுகள் ஆகியன ஏற்பட்டு நாடு பாதிப்படையும் எனக் கருதும் மற்றொருவருக்குமிடையிலான ஓர் **உரையாடல்.**

(iv) 'இன்று அவளுக்குப் பாராட்டுவிழா... அவள் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை மட்டத்தில் முதலிடம் பெற்றமைக்காக இந்த விழா நடைபெறுகிறது. ஆனால் இந்த நிலையை அடைவதற்காக அந்தச் சிறுமி பட்ட பாடுகள் சொல்லிலடங்கா...' என்ற கருப்பொருளிலமைந்த ஒரு **சிறுகதை.**

(25 புள்ளிகள்)

**3.** கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

சிலப்பதிகாரம் என்பது தமிழில் உள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகும். காவிரிப்பூம்பட்டினத்திலே பெருங்குடி வணிகர் குலத்தில் பிறந்த கற்புக்கரசி கண்ணகி, அவள் கணவன் கோவலன் என்பவர்களுடைய வரலாற்றை உரைப்பது. முத்தமிழ்ப் புலமையும் கவித்திறனும் வாய்ந்த இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது. படிப்பவர் மனதைக் கவரும் சொற்சுவையும் பொருட்சுவையும் நிறைந்தது. புகழ்மிக்க மூவேந்தர்களுடைய குளிர்ந்த சோலை என்று கருதப்படும் தமிழகத்தின் பகுதிகளாகிய சேர, சோழ, பாண்டிய நாட்டின் இயல்புகளையும் முறையே அவற்றின் தலைநகரங்களாகிய வஞ்சி, பூம்புகார், மதுரை என்பவற்றின் பெருமைகளையும் எடுத்துரைப்பது. அந்த நகரங்களிலிருந்து நல்லாட்சி புரிந்த சேர, சோழ பாண்டிய மன்னர்களின் தருமம், வீரம், அரசியல் முறைமை முதலியவற்றையும் அவர்களது ஆட்சியில் வாழ்ந்த மக்களின் ஒழுக்கம், ஊக்கம் ஆகியவற்றையும் நன்கு புலப்படுத்துவது. மற்றும் அக்கால உழவுத்தொழில், வணிகம், கைத்தொழிற் பெருக்கம், அரசியல், கல்வி, சமயநிலை முதலானவற்றையும் அறிவதற்குச் சான்றாக உள்ளது. அரசியலில் தவறு விடும் மன்னர்களை அறம் என்ற கடவுள் தண்டிப்பார், கற்பிற் சிறந்து விளங்கும் பெண்களை அனைவரும் போற்றுவர், ஒருவர் ஒரு பிறவியில் செய்த வினைகள் அவரது பிறவிகள் தோறும் தொடரும் ஆகிய மூன்று பெரும் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இதனை இயல், இசை, நாடகக் காப்பியம் எனவும் உரையும் செய்யுளும் கலந்த உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனவும் கூத்தும் பாட்டும் இடையிடை அமைந்த நாடகக் காப்பியம் எனவும் கூறுவர். (10 புள்ளிகள்)

[பக். 7 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**4.** பின்வரும் பாடலை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரண வாக்கியங்களில் விடை எழுதுக.

காடு களைந்தோம் - நல்ல
 கழனி திருத்தியும் உழவு புரிந்தும்
நாடுகள் செய்தோம் - அங்கு
 நாற்றிசை வீதிகள் தோற்றவும் செய்தோம்
வீடுகள் கண்டோம் - அங்கு
 வேண்டிய பண்டங்கள் ஈண்டிடச் செய்தோம்
பாடுகள் பட்டோம் - புவி
 பதமுறவே நாங்கள் நிதமும் உழைத்தோம்
கந்தை அணிந்தோம் - இரு
 கையை விரித்து எங்கள் மெய்யினைப் போர்த்தோம்
மொந்தையில் கூழை - பலர்
 மொய்த்துக் குடித்துப் பசித்துக் கிடந்தோம்
சந்தையில் மாடாய் - யாம்
 சந்ததம் நங்கிட வீடு மில்லாமல்
சிந்தை மெலிந்தோம் - எங்கள்
 சேவைக் கெல்லாம் இது செய்நன்றிதானோ ?

(i) தொழிலாளர் எவ்வாறான தொழில்களையெல்லாம் செய்தனர் ?

(ii) தொழிலாளரது துயரம் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றது ?

(iii) இக்கவிதையில் வந்த உருவக அணியைக் குறிப்பிடுக.

(iv) கழனி, கந்தை என்ற சொற்களின் பொருள் யாது ?

(v) 'மொந்தையில் கூழை - பலர் மொய்த்துக் குடித்துப் பசித்துக் கிடந்தோம்'
என்ற அடியினால் நீர் விளங்கிக் கொள்வது யாது ?

(10 புள்ளிகள்)

**5.** உமது பாடசாலையில் சுவாமி விபுலாநந்தரது 125 ஆவது ஜனன தின விழா கொண்டாடப்படவுள்ளது. உம்மை பாடசாலையின் தமிழ்மன்றச் செயலாளர் எனக் கருதிக்கொண்டு, விழா தொடர்பான விவரங்கள், கலைநிகழ்ச்சிகள் முதலியவற்றைக் குறிப்பிட்டு அவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக வருகை தருமாறும் விபுலாநந்தரது இலக்கிய முயற்சிகள் பற்றி உரையாற்றுமாறும் கேட்டு, பல்கலைக்கழகமொன்றின் துணைவேந்தருக்கு **100** சொற்களில் ஓர் அழைப்புக் **கடிதம்** எழுதுக.

**அல்லது**

நாம் வாழும் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருத்தல், சுத்தமாக வைத்திருக்காவிடின் ஏற்படும் பாதகமான விளைவுகள், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசுடன் இணைந்து நாமும் பிற சமூக அமைப்புகளும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு, **100** சொற்களில் ஒரு **துண்டுப்பிரசுரம்** எழுதுக.

(15 புள்ளிகள்)

* * *

Department of Examinations Sri Lanka

OL/2017/22-T-III(OLD)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

22 T III

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය III
தமிழ் மொழியும் இலக்கியமும் III
Tamil Language and Literature III

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

## தமிழ் மொழியும் இலக்கியமும் III

**முக்கியம் :**

※ அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

※ **1, 2, 3, 4** ஆகிய வினாக்களுக்கும் **5, 6, 7** ஆகிய வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.

※ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** (i) "சொலல் வல்லன் சோர்வு இலன் அஞ்சான் அவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிது"

(அ) இகல் என்பதன் கருத்து யாது ?

(ஆ) இக்குறட்பாவின் பொருளை எழுதுக.

(ii) 'முத்தொள்ளாயிரம்' என்ற சிற்றிலக்கியத்தின் பாட்டுடைத் தலைவர்கள் யாவர் ?

(iii) "பத்தும் பசி வந்திடப் பறந்து போம்" என நல்வழி கூறுகின்றது. இங்கு குறிப்பிடப்படும் பத்தில் எவையேனும் **நான்கினைக்** குறிப்பிடுக.

(iv) "தெள்ளாற்றில் நந்தி பதம் சேரார் ஆனைக்கொம்பன்றோ
நம்குடிலில் குறுங்காலும் நெடுவளையும் குனிந்து பாரே"

(அ) இவ்வடிகளில் நந்திவர்மனின் எச்சிறப்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளது ?

(ஆ) அது எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது ?

(v) 'ஓங்களுக்கு ஒண்ணும் கொறவு வராது.' - இதனை எழுத்து வழக்கில் எழுதுக.

(vi) "மோட்டெருமை வாவிபுக முட்டவரால்..."
எனத் தொடங்கும் பாடலில்,

(அ) யாருடைய சிறப்பு பற்றிப் பேசப்பட்டுள்ளது ?

(ஆ) அவருடைய நாட்டின் பெயர் யாது ?

(vii) "கையில் வெண்ணெய் இருக்க நெய் தேடியலையும் வெள்ளியரும் உண்டு."

(அ) வெள்ளியர் என்பதன் பொருள் யாது ?

(ஆ) இப் பழமொழியின் கருத்தைத் தருக.

(viii) "காளி! பத்திரகாளி... சிங்கத்தைப் பார்த்த கண்ணால் செந்நாயைக் காண்பேனோ?"

(அ) இது யாருடைய கூற்று ?

(ஆ) இக்கூற்று இடம்பெற்ற சிறுகதையை எழுதியவர் யார் ?

(ix) 'மாட்டின் பிணிக்கு மருந்தாய் ஒரு சூடு' - இதன் பொருளை வெளிப்படுத்துவதாக அமையும் பிறிதொரு பழமொழியினைத் தருக.

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

(x) **பார்வைகள்** என்ற சிறுகதையில் குறிப்பிடப்பட்டுள்ள,

(அ) காவியப் பாத்திரமொன்றின் பெயரைக் குறிப்பிடுக.

(ஆ) அந்தப் பாத்திரம் கையிலே வைத்திருந்த அணிகலன் யாது ? (20 புள்ளிகள்)

**2.** பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைநடைப் பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துகளிலுள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.

(அ) **பூணுக் கழகளிக்கும் பொற்றொடியைக்** கண்டக்கால்
நாணுக்கு நெஞ்சுடைய நல்வேந்தர் - நீணிலத்து
மற்றேவர் வாராதார் வானவரும் வந்திருந்தார்
பொற்றேர் நளனுருவாய்ப் போந்து

(ஆ) காப்படங்கென் றன்னை கடிமனையிற் செறித்து
யாப்படங்க ஓடி அடைத்தபின் - மாக்கடுங்கோன்
நன்நலம் காணக் **கதவம் துளைதொட்டார்க்**
**கென்னைகொல் கைம்மா றினி**

(இ) இவ்வுலக வாழ்க்கையை நன்றாக நடத்தும் முறையில் ஆண்மக்களைக் காட்டிலும் மிகுந்த பொறுமையும் ஆழ்ந்த நுண்ணறிவும் வேண்டிய அவர்கட்குக் **கல்வியெனுந் தூண்டாமணி விளக்கைத்** தாராமல் அவர்களை அறியாமை என்னும் பேர் இருளிற் போகச் சொல்லுபவர்கள் உண்மை அறிந்தாராவாரோ சொன்மின்கள்!

(ஈ) **அபிநவ அகத்திய, தண்டமிழ்ச் சாகர, தான்தோன்றிக் குமாரப் புலவர்** என்பவர் நாமே. நமது பெருமை மலை மேலிட்ட தீபம். ஈயாத லோபிகள் எல்லாம் பூண்டற்றுப் போகும்படி வசைபாடுவோம். 'இம்' என்றால் எழுநூறும் 'அம்' என்றால் ஆயிரமுமாகக் கவி பொழிவோம். (20 புள்ளிகள்)

**3.** **நளவெண்பா சுயம்வரகாண்டப்** பகுதியில், தமயந்தி சுயம்வர மண்டபத்துள் புகுந்தது முதல் அவள் நளனுக்கு மாலையிட்டது வரையான நிகழ்ச்சிகள் சித்திரிக்கப்படுமாற்றை விவரிக்குக.

**அல்லது**

'**முத்தொள்ளாயிரம்**, காதலையும் வீரத்தையும் ஒருங்கே கூறும் சிற்றிலக்கியமாகும்.' விளக்குக. (15 புள்ளிகள்)

**4.** 'கடமையே தெய்வம்' என்ற கருத்து **ஒரு பதிவிரதையின் சரித்திரம்** என்ற கதையில் வெளிப்படுத்தப்படும் விதத்தை விளக்குக.

**அல்லது**

**பாரதியார் கவிநயம்** என்ற கட்டுரையில், நாட்டின் விடுதலைக்கும் தமிழ்மொழிக்கும் பாரதியார் ஆற்றிய பணிகள் கூறப்பட்டிருக்குமாற்றினை விவரிக்குக. (15 புள்ளிகள்)

- பின்வரும் **5, 6, 7** ஆகிய வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவுசெய்து விடை எழுதுக.

**5.** வாழ்த்துக்கவி, வசைக்கவி என்பவற்றை விளக்கி, இடைச்சியர் கொடுத்த மோரைக் குறித்து காளமேகப்புலவர் பாடிய வசைக்கவியை விளக்குக. (10 புள்ளிகள்)

**6.** **மீன்பிடிகாரர் பாடலில்** மீனவர்களது உழைப்பு, நம்பிக்கை, மனோதைரியம் என்பன வெளிப்படுமாற்றை விவரிக்குக. (10 புள்ளிகள்)

**7.** **பார்வைகள்** என்ற சிறுகதையில் வரும் விமலன் என்ற சிறுவன் பாத்திரத்தை ஆசிரியர் சித்திரித்துள்ளவாற்றை எடுத்துரைக்குக. (10 புள்ளிகள்)

* * *

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka